Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

ஜூலாய் பெட்டி எண்/ 49 — மலர் 13
போன் 389 — தேசிய தினசரி — இதழ் 251

யாழ்ப்பாணம் ஐப்பசி 4 நமழான் 1 வியாழக்கிழமை (21-10-71)

பச்சைச் சந்தனம்

யந்திரத்தினால்
அரைக்கப்பெற்ற நறுமணம் கமழும்
பச்சைச்சந்தனம்
எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம்
ஆ. இராசையா அன் சன்ஸ்,
(மருந்துக் கடை)
69, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.

இலங்கையிலும் செயற்கை கிரகதந்திச் சேவை

வீண்கால தாமதத்துக்கு விரைவில் முற்றுப்புள்ளி

கொழும்பு, புதன்

நாட்டின் தொலைதூரத் தந்தி போக்குவரத்தில் ஏற்பட்டுவரும் காலதாமதம் மிகவிரைவில் ஒருமுடிவுக்கு வந்துவிடும்.

நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் அனுப்பப்பட்டு வரும் தந்திகளை தகவல் தொடர்பு செயற்கை கிரகங்களின் மூலம் அனுப்புவதற்கு தபால் தந்திப் போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை எடுத்துவருவதே இதற்கு காரணம்.

இத்தகவலை தபால் தந்திப் போக்கு வரத்து உதவி அமைச்சர் திரு. வி. ரி. ஜி. கருணாரத்ன வெளியிட்டார் புலத்சிங்கள என்ற பொதுவைபவமொன்றில் திரு. கருணாரத்ன பேசினார்.

இலங்கையின் தந்தித் தொடர்புகள் 32 செயற்கைக்கிரகங்களுடன் இணைக்கப்படும் என்றும் அதன் மூலம் முன்னேறிய மற்ற நாடுகளுடன் இலங்கை இந்தத்துறையில் ஒப்பிடக்கூடிய அளவுக்கு முன்னேறிவரும் என்றும் திரு. கருணாரத்ன கூறினார். இதற்கான திட்டங்களை அமைச்சு தீட்டியுள்ளது என்றும் அவர் சொன்னார்.

அமெரிக்க அதிபரை பிரதமர் சந்தித்தார்

வாஷிங்டன், அக். 20

இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அமெரிக்க அதிபர் திரு. நிக்ஸனை அவரது உத்தியோகப் பூர்வ வாசஸ்தலமான வெள்ளை மாளிகையில் சந்தித்து 45 நிமிடங்கள் ஆலோசனை நடத்தினார்.

தென்கிழக்காஸிய நெருக்கடி, நிக்ஸனின் பீக்கிங் விஜயம் போன்ற விஷயங்கள் பற்றி இரு தலைவர்களும் பேசியதாக அவதானிகள் தெரிவித்தனர். பின்னர் பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா ராஜாங்க அமைச்சர் திரு. ரோஜர்சையும் சந்தித்து சுமார் 30 நிமிடங்கள் பேச்சுவார்த்தை நடத்தினார்.

றேடியோக்கள், ஒலிப்பதிவு கருவிகள் பிடிபட்டன

யாழ்ப்பாணம், வியாழன்

இலங்கைக்குள் கள்ளத்தனமாகக் கடத்தப்பட்டதாகக் கருதப்படும் வானொலிப் பெட்டிகள், ஒலிப்பதிவுக் கருவிகள் ஆகியன பெருமளவில் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள ஒரு நிறுவனத்திலிருந்து கைப்பற்றப்பட்டன.

சுமார் இருபத்தையாயிரம் ரூபாய் பெறுமதியான பொருள்கள் என மதிப்பிடப்படும் இப்பொருள்களை சுங்கத்தடுப்பு அதிகாரி திரு. என். ஜயராஜா தலைமையில் சென்ற கோஷ்டியினர் சென்ற செவ்வாய்க்கிழமை கைப்பற்றினர்.

இது சம்பந்தமாக கடைச் சொந்தக்காரர் விசாரணை செய்யப்பட்டார். மேல் விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

தமிழுக்கும் இடம்

உடுப்பிட்டி, புதன்

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி உயர்தர மாணவர் மன்ற இராப்போசனவிருந்தில் கல்லூரியின் சரித்திரத்தில் முதன் முறையாக தமிழுக்கும் இடமளிக்கப்பட்டிருக்கிறது.

இம்மாதம் 30-ம் திகதி நடைபெறவிருக்கும் இவ்விருந்தில் வடமாநில கல்வி யதிபதி திரு. டபிள்யூ. டி. கி. மகாதந்தில பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

1500 விஞ்ஞான ஆசிரியர்கள்

அடுத்த ஜனவரியில் மேலும் 1,500 விஞ்ஞான ஆசிரியர்கள் கிராமப் பாடசாலைகளுக்கு நியமிக்கப்படவுள்ளனர். இத்தகவலை கல்வி அமைச்சர் டாக்டர் பதியுதீன் மஹ்மூத் தெரிவித்தார்.

இந்திய — யூகோ. அறிக்கை

"தாமதத்தினால் நிலைமை மேலும் மோசமாகும்"

யு. எஸ். யோசனைக்கு பாரதம் எதிர்ப்பு

புதுடில்லி, அக். 20

கிழக்குப் பாகிஸ்தான் பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்த அவசர நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று இந்தியாவும் யூகோஸ்லாவியாவும் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

யூகோஸ்லாவிய அதிபர் மார்ஷல் டிட்டோ இந்தியாவில் மேற்கொண்ட அரசமுறையிலான நான்கு நாள் விஜயத்தின் முடிவில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் மேற்கண்டவருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்குப் பாகிஸ்தான் பிரச்னைக்கு தீர்வுகாண்பது ஒத்திப்போடப்பட்டால் நிலைமை மேலும் மோசமடையவே வழியேற்படும். அங்கு அமைதியேற்பட மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் விருப்பத்துக்கமைய தீர்வொன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்று கூட்டறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பாரதம் எதிர்ப்பு

பாகிஸ்தான் படைகள் எல்லைப்பகுதியில் குவிக்கப்பட்டுவருவது சம்பந்தமாக இந்தியா எடுக்கும் நடவடிக்கைகளில் கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ளவேண்டும் என்று அமெரிக்கா யோசனை தெரிவித்திருப்பதற்கு இந்தியா கடும் எதிர்ப்புத்தெரிவித்திருக்கின்றது.

இதுவரைகாலமும் இந்தியா கட்டுப்பாட்டுடன் நடந்துகொண்டது அமெரிக்காவுக்குத் தெரியாமலிருக்க முடியாது என்று இந்திய அதிகாரி ஒருவர் கூறினார்.

அமெரிக்காவின் எல்லையில் இப்படியொரு சம்பவம் நிகழ்ந்திருந்தால் அந்தநாடு எப்படி நடந்துகொள்ளும் என்று எண்ணிப்பார்க்க வேண்டும் என்றார் அந்த அதிகாரி. அமெரிக்காவின் இந்தப்போக்கு பாரதத்துடனான உறவுகள் மேலும் சீர்குலைவதற்குத்தான் வழி செய்யும் என்றார் அவர்.

கருணாநிதி அமெரிக்கா செல்வார்

சென்னை, அக். 20

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி விரைவில் அமெரிக்காவுக்கு செல்லவிருக்கிறார்.

சென்னையிலுள்ள அமெரிக்க தூதரக பொறுப்பதிகாரி திரு. பாமர் இத்தகவலை வெளியிட்டார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சி பற்றி திரு. கே. எஸ். ராமானுஜம் என்பவரால் எழுதப்பட்ட நூல் வெளியீட்டு விழாவில் திரு. பாமர் இதைக்கூறினார். இந்த நூலின் முதல் பிரதியை திரு. பாமரிடம் திரு. கருணாநிதி கையளித்தார்

ஐரோப்பாவிலேயே முதலாவது வெற்றி

லண்டன், அக். 20

இருதயத்தின் ஒரு பக்கத்திலுள்ள இரத்தாசயக் குழாயின் ஒரு பகுதியை வெட்டி எடுத்து, அதனை உடலுக்கு இரத்தம் எடுத்துச் செல்லும் பிரதம இரத்தாசயக் குழாயுடன் இணைக்கும் ஓர் அரிய அறுவைச் சிகிச்சை, லீட்ஸில் மிக வெற்றிகரமாகச் செய்யப்பட்டுள்ளது. பன்னிரண்டு வயதுச் சிறுமியில் இவ்வற்புதமான அறுவைச் சிகிச்சை நடத்தப்பட்டிருக்கிறது.

இப்படிப்பட்ட அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக நடத்தப்பட்டிருப்பது [illegible]

புதிய பட்ஜட் நவ. 10ம் திகதி

கொழும்பு, புதன்

இலங்கையில் அடுத்த நிதியாண்டுக்கான நிதிநிலை மதிப்பீட்டு அறிக்கையை நவம்பர்மாதம் 10ம் திகதி நிதியமைச்சர் டாக்டர் என்எம் பெரேரா [illegible] தெரிகிறது.

மரண அறிவித்தல்

திருமதி பாக்கியம் யோபுப்பிள்ளை

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி பாக்கியம் யோபுப்பிள்ளை காலமானார். இவர் காலஞ்சென்ற மலாயன் தபால் அதிபர் யோபுப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், சேனாதிராசா (தபால் அதிபர் கொழும்பு), சவுந்தரராஜா (கூட்டுறவு உதவி ஆணையாளர் கல்முனை), செல்வராஜா (தலைமை ஆசிரியர் சுப்பிரமணிய வித்தியாசாலை புங்குடுதீவு), இரத்தினராஜா (தலைமை ஆசிரியர் ரோமன் கத்தோலிக்கப் பாடசாலை சில்லாலை), சற்குணராஜா (ஆசிரியர் கணேசன் வித்தியாசாலை புங்குடுதீவு), முத்துராஜா (அரசாங்க ஒப்பந்தகாரர் மூதூர்) திருமதி அரிய மலர், திருமதி நேசமலர் ஆகியோரின் அன்புத்தாயாரும், தங்கரத்தினம், பரிமளம் (ஆசிரியை கொட்டடி நமசிவாய வித்தியாசாலை) கமலா, இரத்தினமலர் (ஆசிரியை மிஷன் பாடசாலை பிராம்பத்தை) பராசக்தி, சுகிர்தஇரத்தினம், முருகேசு, கனகரெத்தினம் (ஆசிரியர் அமெரிக்கன்மிஷன் பாடசாலை புங்குடுதீவு) ஆகியோரின் அருமைமாமியாருமாவர் அன்னாரின் பூதவுடம் 21-10-71 இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு "ராஜமாசம்" புங்குடுதீவிலிருந்து நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். 3089

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வரி விளம்பரம்

மோட்டார் வாகனங்கள் மற்றும் சகலவிதமான யந்திரசாதனங்களுக்கும் உதிரிப்பாகங்கள் ஜேர்மனியில் தயாரிக்கப்பட்ட பொறியியல் வாகனங்களின் மேற்பார்வை மிஷன் செய்து கொடுக்கும் ராதா கொமர்ஷல் கொம்பனி. 95. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம். 3625

வைத்தியசேவை செய்ய ஆயுர்வேத முறைப்படி பெண்களை தேவை. டெப்பிலேயே செய்யக்கூடிய வர்களை விரும்புகிறோம். சந்துபுரம் பிக்கஸ், 7. 2ம் ஒழுங்கை, பிரவுன் வீதி. யாழ்ப்பாணம். 3639

விற்பனைக்கு

சொந்தக்காரரால் மாதிரி ரம் பாவிக்கப்பட்ட நல்ல ஒட்டி நிலையிலுள்ள சன் பீம் (ரஷ்பேட்) CN 7927 இலக்க ஸ்போர்ட்ஸ் மொடல் கார். தொடர்பு கொள்ள:- நடராசா கோட்டம். வலவெட்டித்துறை. தொலைபேசி- வலவெட்டித்துறை 26 அல்லது 805 3676

விற்பனைக்கு

ராதா கோடாப்பவுடர், நிறத்தை வாசனை யுடையது. கோடாத தலாரிப்பாளர்களை மிகவும் விரும்பப்படுவது காட்டிற்கு மணமும், குணமும் உண்டாக்கும். எஸ். சுப்பிரமணியம் கொம்பனி 53, காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம், 160, செட்டியார் தெரு, கொழும்பு. 3624

33 ஸ்ரீ 6238 இலக்க மெரி பெர்குசன் டிராக்டர் 44 ஸ்ரீ 1334 இலக்க ட்டெபில் ஒன்று விற்பனைக்கு உள்ளது. M தம்பிராசா பிரைவேற் செக்ரெட்டரி, ஏழாலை மேற்கு சுன்னாகம். 3677

விவசாயிகளுக்கு ஒரு நற் செய்தி. உழுத்தம்பருப்பு விவசாயத்தில் அதிலாபம் அடைய குறைந்த கூலியில் உழுது உடைத்துக் கொடுக்கப்படும். நேரில் அல்லது தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும். முகமதி ஜெனரல்டிலிவரி மிஷன் 443. கே.கே.எஸ்.ரோட் யாழ்ப்பாணம்-தொலைபேசி 611 3675

விற்பனைக்கு

அலுக்கை, ஆளவெட்டியில் 5 பரப்புத் தோட்டக் காணியும் 6 பரப்பு வெறுங்காணியும் விற்பனைக்கு உண்டு விரும்புவோர் தொலையுடன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல.3678 C/O ஈழநாடு யாழ்ப்பாணம். 3678

தேவை

சலவை செய்வதற்குத் தேவையான ஸ்ராச்சி(Starch) முற்றிலும் கொமிஷன் அடிப்படையில் வீட்டுக்கு வீடு விற்பனை செய்வதற்குப் பெண் விற்பனையாளர்கள் தேவை. விண்ணப்பிக்கவும்:- ஸ்ராண்லி ஹவுஸ். 95/1, ஸ்ராண்லி ரோட், யாழ்ப்பாணம். 3673

உதைபந்தாட்டப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், மிசன் செஞ் ஜோன்ஸ் கல்லூரிக்கும் செஞ்ஹென்றீஸ் கல்லூரிக்கும் இடையே இளவாலியில் நடந்த உதைபந்தாட்டப் போட்டியில் 3ம் பிரிவுப் போட்டி கோல் ஒன்றும் போடாமல் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

2ம் பிரிவுப்போட்டியில் செஞ் ஜோன்ஸ் 3 கோல்களும், செஞ். ஹென்றீஸ் 2 கோல்களும் பெற்று செஞ் ஜோன்ஸ் வெற்றியீட்டியது.

முதற் பிரிவுப் போட்டியில் இருசாராரும் மாறி மாறி கோல்களைப் போட்டார்கள். செஞ். ஜோன்சுக்கு 5 கோல்களும், செஞ். ஹென்றீசுக்கு 4 கோல்களும் கிடைத்து செஞ். ஜோன்ஸ் வெற்றியீட்டியது.

செஞ் ஜோன்ஸ் கல்லூரி முதல் பிரிவுக்கோஷ்டி இது வரையிலாடிய போட்டிகளிலெல்லாவற்றிலும் வெற்றி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (தே.நி)

மீண்டும் வேலையில்

சமாசுகே, புதன் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர் சோமசுந்தரம் ப.நோ.கூ. டிப்போ மனேசர் திரு. எஸ். பென்னம்பலம் விசாரணை முடிவில் மீண்டும் மானிப்பாய் வேலைக்கு மாற்றப்பட்டு ப.நோ.கூ. சங்கத்தில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளார்.

விளம்பரம்

தற்காலிகக் கட்டளை

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

தெல்லிப்பழை, பன்னாலை, தியாகவசந்தத்தைச் சேர்ந்த நில்கேசபரம் தியாகராசா என்பவரின் மரண சாசனமில்லாத சொத்து சம்பந்தமாக

காலஞ்சென்றவர் வழக்கு இல 2728

வேலுப்பிள்ளை நில்கேசபரம், தியாகவசம், பன்னாலை, தெல்லிப்பழை

மனுதாரர்

1. நில்கேநாயகம் வேலாயுதம், பன்னாலை, தெல்லிப்பழை.

2. நில்கேநாயகம் ஆறுமுகம், பன்னாலை, தெல்லிப்பழை.

எதிர்மனுதாரர்கள்

இந்த விவகாரம் யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி அ. வியத்திலிங்கம் அவர்கள் முன்னிலையில் 1971 ஆடி மாதம் 28-ம் திகதி மனுதாரி சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு ந. ஜீவகுலராஜின் சமூகத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மனுதாரின் சத்தியக்கடதாசி வாசித்துக் காட்டப்பட்டது

மேலும் 1971 ஆடி மாதம் 26-ந் திகதிக்கு முன்னர் அல்லது அதற்கு முன்னர் மேற்கூறப்பட்ட எதிர்மனுதாரர்கள் அல்லது இதில் அக்கறையுள்ள வேறயாரும் இந்த நீதிமன்றத்தின் திருப்திக்கேற்ப போதிய ஆதாரம் காட்டி மறுப்புரை தாக்கல் செய்யாவிட்டால் மேலே கூறப்பட்ட காலஞ்சென்ற வரின் சாசனமா? என்ற வினாவில் காலஞ்சென்ற வரின் சொத்துக்கு மேற்கூறப்பட்ட மனுதாரே உரிமையுடையவரென்றும் ஆன்ஸவருக்கே வழங்கிய நிர்வாகப் பத்திரங்கள் வழங்கவேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டது

(ஒப்பம்) அ.வயித்திலிங்கம்
மாவட்ட நீதிபதி

1971 தெதிரை மாதம் 28-ம் திகதி

இவ்வழக்குச் சம்பந்தமாக் காரணம் காண்பிக்கும் காலம் 27-10-71 வரை நீடிக்கப்பட்டுள்ளது

[ஒப்பம்] அ.வயித்திலிங்கம்
3085

சர்வாலயதீபத் திருத்தம்

இவ்விரோதிகிருது வருஷ வாக்கிய பஞ்சாங்கத்தில் கார்த்திகை மாதத்தில் 16-ம்திகதி (2-12-71) குறிக்கப்பட்ட சர்வாலய தீபத்தை (வீடுகளில் தீபம்) கார்த்திகை மாதம் 15 ம் திகதி புதன்கிழமை (1-12-71) கைகொள்ளும் படி கேட்டுக் கொள்ளுகிறோம். இப்படிக்கு, இ. வெங்கடேசஐயர் வாக்கிய பஞ்சாங்கனிதர். 3087

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

(செந்தில்: காலை 6-30; பகல் 12-45 மாலை 6-00, இரவு 9-00)

294 மீ. அலை 59 மீ. மாலை 6-15 தாதாஞ்சலி, 6-20 சுவாதிசிந்தனை, 6-25 இஸ்லாமிய நாதசிந்தனை, 7-00 உரை நிகழ்ச்சி, 7 15 தமிழ்ப்பாடல்கள், 7-30மெல்லிசை, 8-00இசை வேள்வி, 8-15 இஸ்லாமிய பாடல்கள்.

இரவு 6-10 இடைவேளை, 6-15 ஒடிவிளையாடு பாப்பா, 6-30வாத்தியக்கச்சேரி, 7-00 தமிழ்மூலம் சிங்களம், 7-30 புல்லாங்குழலும் கிளாரினெட்டும், 7-45 நேயர் விருப்பங்கள், 8-00 மூஸ்லிம் நிகழ்ச்சி, 8-55 இஸ்லாமிய பாடல், 9-30 கலந்தரை பாடல், 10-00 இசைமுரசம் 10-30 செய்தி தொகுப்பு.

மன்னாரில் கடும் வரட்சி

கோதிவரம், புதன் மன்னார் மாவட்டத்தில் கடுமையான வரட்சி நீடிப்பதால் இறுதி மழை பயனாக அமையாமல் பெய்யாமலிருப்பதால் இப்பகுதியில் கால போக நெல்விதைப்பு இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை. குளங்களும் மற்றும் நீர் நிலைகளும் வற்றிவிட்டன. கிணறுகளில் நீர்மட்டமும் மிகவும் தாழ்ந்துள்ளது.

குடிதண்ணீருக்குப் பெரும் கட்டுப்பாடு கிராமங்களில் ஏற்பட்டுள்ளது. நீர் தேடி அலைவதால் விவசாயிகள் சோர்வடைகின்றனர்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

ராஜா எம்.ஜி.ஆர்.— ஜெயலலிதா
[யாழ்ப்பாணம்] சோ — அசோகன்
(தினசரி 4 காட்சிகள்) நடித்த
ஒளிவிளக்கு

ராணி ஜெய்சங்கர் — ஜெயலலிதா
(யாழ்ப்பாணம்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
நூற்றுக்கு நூறு

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சௌகார் ஜானகி
(இரு வேடங்களில்)
ரவிச்சந்திரன் - எம்.ஆர்.ஆர். வாசு
நடித்த
காவியத்தலைவி

லிடோ [யாழ்நகர்]
காலை 10-00 பி.ப. 2-00 மாலை 6-00, இரவு 9-30.
ராஜேஷ்கன்னா
ஷர்மிளா தாகூர்
சுஜித்குமார்
நரீகோஜலால்
நடித்த
சக்தி பிலிம்ஸ்

ஆராதனை

3.வது வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
பி.ப. 2-30 மாலை 6-30 இரவு 10-00
சனி, ஞாயிறு, 4 காட்சிகள்.
அக்கா தங்கை
* ஜெய்சங்கர் * கே. ஆர். விஜயா
* சுந்தராராஜன் சௌகார் ஜானகி
இன்னும் பலர் நடித்தது.

வெல்லிசினிமா
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 10-00
சிவாஜி - வாணிஸ்ரீ
நடித்த
நிறைகுடம்

நாகம்ஸ்சினிமா
சன்னகம்
தினசரி 4 30
சனி. ஞாயிறு 10-30
LOOK IN ANY WINDOW
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
மதுரைவீரன்

றீகல் (யாழ்ப்பாணம்)
தினசரி பி.ப 2-00, 10-00
எம். ஜி. ஆர்- சரோஜாதேவி
நடித்த
தாலி பாக்கியம்

Daily 5-15 & 7-15 p m.
Sat. Sundays 10-30
Sidney Poitier
in
TO SIR WITH LOVE

இன்று மட்டும்
மனோகரா (யாழ்ப்பாணம்) உதயகுமார், சைலஸ்ரீ ஜோதிலட்சுமி
தினசரி 4 காட்சிகள் நடித்த

கள்வனுக்கு கள்வன்
From 22-10-71
HATARI
Please book early. Special concession to a group of 50 and over

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரத - பாக். எல்லை நிலைமை பற்றி யுதாண்ட் பெரும்கவலை

சீனாவில் லிம்பியாவ் ஓரங்கப் படுவாரா?

ஹொங்கொங், அக். 20

கட்சித்தலைமைக்கு எதிர்ப்பாக "கட்சியின் கட்டுத் தலைமைக்கு" கீழ்ப்படிந்து நடக்கும்படி சீன ராணுவத் தலைமைப் பீடம் விடுத்த அறிக்கையொன்றை நேற்று முன்தினம் பீகிங் வானொலி திரும்பத் திரும்ப ஒலிபரப் பியது.

கட்சிதான் துப்பாக்கியை ஆளவேண்டுமே தவிர துப் பாக்கி கட்சியை ஆளக் கூடாது என்று தலைவர் மாசேதுங் சீன மக்களி டுதலை சேனைக்கு அறை கூரம்பித்தலைமை தொடே அறிவுறுத்தி வந்திருக்கிறார். இந்த அறிவுரையின் அடிப் படையிலேயே மேற்படி அறி விக்கை இருந்தது.

தலைவர் மாசேதுங்கிற்குப் பிறகு மார்ஷல் லிம்பி யாவ் அந்தத் தலைமைப் பதவியை ஏற்பது சாத்திய மில்லை யென்றும் சீனாவில் கூட்டுத் தலைமையொன்று ஏற்படக்கூடும் என்றும் பூகோளவ்வ், ரூமேனிய உயர் வட்டாரங்களை ஆதாரம்காட்டி லண்டனி லிருந்த செய்திகள் வெளி யான தவேவேளையில் இத் தப் பீகிங் வானொலி அறி விக்கையும் வந்திருக்கின்றது.

1969-ம் ஆண்டு நடை பெற்ற சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 9-வது மாநாட்டில் ஏற்றுக்கொள் ளப்பட்ட கட்சி அமைப்புச் சட்டத்தில் மாசேதுங்கின் வாரிசாக லிம்பியாவ் அ கோரிக்கப்பட்டிருந்தார். சமீ பத்தில் இடம்பெற்ற கம் யூனிஸ்ட்கட்சியின் தலைமைப் பீடம் மேற்படி ஆகஸ்ட்புச் சட்டத்தை மாற்றுவதென் றும் மாசேதுங்கிற்குப் பிறகு கூட்டுத்தலைமை பொன்றை மேற்படுத்துவதென்றும் முடிவுசெய்திருப்பதாக லண்டன் செய்திகள் கூறின.

நியுயோர்க், அக். 20

பாரத-பாகிஸ்தான் எல்லை யில் பூசல் நிலைமை மோச மாகிக் கொண்டிருப்பது பற்றி ஐ.நா. பொதுச்செய லாளர் பெரிதும் கவலை கொண்டிருக்கிறார்.

இதனைக் ஐ. நாவைச் சேர்ந்த உயர்தர அதிகாரி ஒருவர் வெளியிட்டார்.

பாரத-பாகிஸ்தான் எல்லை யில் நிலைமை மோசமாகிக் கொண்டிருப்பது பற்றி யுதாண்ட் கவலைகொண்டி ருப்பதுடன் அதிகரித்துள்ள நிலைமையை மிகவும் உன் னிப்பாகக்கவனித்தும் வரு கிறார் என்று ஐ.நா. வைச் சேர்ந்த மற்ற அதிகாரி தெரிவித்தார். என்றாலும் எல்லையில் ஏற்பட்டுள்ள பதற்றத்தைப் போக்கு வதற்கான எந்தவித உட னடி நடவடிக்கையையும் யுதாண்ட்எடுக்கப்போவதற் கான தகவல் எதுவும் அந்த அதிகாரியிடமிருந்து வெளி வரவில்லை.

ஐ.நா. சபைக்கு பொதுச் செயலாளர் யுதாண்ட் சமர்ப்பித்த வருடாந்த அறிக்கையிலும் இவ்வாறு பாரத-பாகிஸ்தான் எல்லை நிலைமை பற்றி கவலைதெரி வித்திருந்தது குறிப்பிடத் தக்கது.

கொலிஜின் கியூபா செல்வார்

ஒட்டாவா, அக். 20

தற்பொழுது கனடாவில் இருக்கும் சோவியத் பிரத மர் திரு. கொஸிஜின் இம் மாத இறுதியில் கியூபாவுக் கும் விஜயம்செய்வார்என்ற அறிவிக்கப்பட்டிருக்கின் றது.

ஒட்டாவாவில் திரு. கொஸிஜினை நேற்றுமுன் தினம் தங்கிய ஹங்கேரிய அதிபரான 27 வயது இளை ஞன் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு நிர்வா ணடிக் வைக்கப்பட்டான்.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து திரு. கொஸி ஜினுக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட் டுள்ளன. ஒட்டாவாவிற்திரு கொஸிஜினின் வருகையை எதிர்த்து பலர் ஆர்ப்பாட்டங்கள் நடத்தி னார்கள். ——

யுகண்டா தான்சானியா எல்லையில்குழறல்

லண்டன், அக். 20

யுகண்டாவுக்கும் தான் சானியாவுக்கு மிடையிலான எல்லையில் இருதரப்பு படை களும் மீண்டும் மோதிக் கொண்டதாக செய்திகள் வந்துள்ளன.

தான்சானியா தனது இரா மங்களின் மீது குண்டுவீசித் தாக்குதல் நடத்திவிருப்ப தாகவும் இதில் 21 இராண வரங்கள் கொல்லப்பட்டிருப் பதாகவும் யுகண்டாகுற்றஞ் சாட்டியிருக்கின்றது. யுகண் டாவின் எல்லைப்படைகள் முதலில் கூட்டதாகவும் தம் மீது படைகள் தாக்குப்பதி லாகச்சுட்டதாகவும் தான் சானியா தெரிவித்துள்ளது.

குண்டுவெடித்து டக்காவில் 5 பேர் பலி

நேற்று கிழக்கு பாகிஸ் தான் தலைநகரான டாக்கா வின் மத்திய பகுதியில் வங்கி யொன்றில் முன்னால் குண்டு ஒன்று வெடித்ததில் 5 பேர் பலியானார்கள். வங்கிக்கு ஒல் நிறுத்தப்பட்டிருந்த கார் ஒன்றில் இத்தாக்குண்டு வெடித்தது. கார் முற்றாகச் சேதமுற்றது. வங்கத்தில் நிறுத்தப்பட்டிருந்த வேறு பலகார்களும் சேதமுற்றன. ஸ்தலத்தில் 4 பேர் மரண மானதாகவும் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட 50 பேரில் ஒருவர் அன்று மரணமானதாகவும் செய்தி கள் கூறின.

கஸ்பா நகர் மீண்டும் வீழ்ச்சி

கொமிலா பகுதியி லுள்ள கஸ்பாநகரை 'முக்தி பஹிமி' என்ற விடு தலைப் படையினர் மீண்டும் கைப்பற்றியிருப்பதாக புது டில்லிக்குஇடைக்கும் செய்தி கள் கூறுகின்றன. விடுதலைப் படையினரி லமிருந்த கஸ்பா நகர்மீது கடந்த 13-ம் திகதி பாகிஸ்தான் ராணுவத்தினர் பிரங்கிகளா தாக்குதல்கள் என்றும் இதனைத் தொடர்ந்து விடுதலைப் படையினர் பிரங்கிகளுடன் திரும்பி வந்து மேற்கு தாக்குதல் நடத்தி கஸ்பாவைக் கைப்பற்றியுள்ளார்கள் என்றும் செய்திகள் கூறுகின் றன. இந்த மோதலில் 40 பாகிஸ்தான் விடுதலைப் படை யினர் கொல்லப்பட்டார் களும்.

நிஜஷ்பூர் பகுதியிலும் பலத்த மோதல்கள் இடம் பெற்றுவருவதாகவும் கடந்த இருதினங்களில் 30 பாகிஸ் தான் முக்தி பஹிமி' யினர் தீர்த்துக் கட்டியிருக்கின் றார்கள் என்றும் சொல்லப்படுகின் றது.

வட அயர்லாந்தில்

அரசியல் வாதியைப் பிடிக்க பொலிஸ், ராணுவம் முயற்சி

பெல்பாஸ்ட், அக். 20

வடஅயர்லாந்தில் பெல் பாஸ்ட் நகரிலுள்ள பள்ளிக்கூ டமொன்றில் மாணவர் சங்கக்கட்டிடத்தை நேற்று ராணுவத்தினரும் பொலிசா ரும் முற்றுகையிட்டனர் தடைசெய்யப்பட்டுள்ள ஐரிஷ் குடியரசுக் கட்சி யைச் சேர்ந்த ஒரு தலை வரைக் கைதுசெய்வதற்காக இந்த முற்றுகை மேற்கொள் ளப்பட்டது.

மேற்படி தலைவர் மாண வர்களுக்கு ஐரோப்பிய பொதுச் சந்தைபற்றி உரை நிகழ்த்திவிட்டு வெளியே றும்போது ராணுவத்தின ரும் பொலிசாரும் கட்டி டத்தைச்சுற்றி வளைத்தனர். ஆனால் அவரை மாணவர் கள் கட்டிடத்துக்குள் திருப்பி அழைத்துச்சென்றமையால் அவர் பத்திரமாக டப்ளினுக்கு கொண்டுபோய் விடப்படுவார் என உத்தர வாதம்தந்தால் மாத்திரமே ஒப்படைக்க முடியும் என்று அறிவித்தனர். ஏமாற்ற மடைந்த ராணுவத்தினர் திரும்பிவிட்டனர். பொலி சார் தொடர்ந்து கவல் புரிந்துவருகின்றனர்..

தடைசெய்யப்பட்ட ஐரிஷ் குடியரசு ராணுவத்தினரு ழங்கப்படுவதற்காக ஒளித்துவைக்கப்பற்றிருந்த துப்பாக்கிகள் போன்ற ஏராளமான ஆயுதங்கள் ஐரிஷ் குடியரசுக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

கூயின் எலிஸபெத்-11 என்ற கப்பலில் இந்த ஆயுதங்கள் ஓர் அறையில் கண்டுபிடிக் கப்பட்டன. ஆனால் அதற்கு எவரும் உரிமைகோரவில்லை.

ஐ. நா. சபையிலிருந்து

தாய்வானை வெளியேற்ற சீனா - பாக். ஆதரவு

நியுயோர்க், அக். 20

ஐ.நா பொதுச் சபையில் சீனாவை அமர்த்தவேண்டும் என்றும் தாய்வானை வெளி யேற்றவேண்டும் என்றும் தெரிக்கும் அல்பேனிய தீர்மானத்தை ஆதரித்த பாகிஸ்தான் இலங்கை, போன்ற நாடுகளின் பிரதி நிதிகள் நேற்று பேசினர்.

சீனாவின் சார்பில் தாய் வான் ஐ.நா.வில்இருக்கமுடி யாது என்ற பாகிஸ்தான் பிரதிநிதி கூறினர். சீனாவை தாய்வான் சட்டபூர்வமாகப் பிரதிநிதித்துவப்படுத்த முடியாது என்ற எடுத்து எப்பொழுதுமே இருந்து வந்துள்ளது என்று இலங் கைப் பிரதிநிதி தெரித்தார்.

தாய்வானை வெளியேற்று வது தன்னாலவிப்பது போன்றதாகும் எனவே மக் கள் சீனாவை ஐ.நா.வில் அங்கீகரிப்பதுடன் தாய் வானையும் தொடர்ந்து இருக்க அனுமதிக்கவேண் டும் என்று ஜப்பானிய பிரதி நிதி பேசினர். பிகிங்கிற்கு ஐ.நா.வில் இடம் கிடைக் கச் செய்வதுடன் தாய் வான் சபையில் தொடர்ந்து இருக்க அனுமதிக்கவேண் டும் என்று கரும் அமெரிக் கப் பிரேரணையை ஜப்பா னிய பிரதிநிதி ஆதரித்துப் பேசினர்.

பலஸ்தீன அகதிகள் முகாம்களில் இஸ்ரேல் படைகள் தாக்குதல்

நினைத்த இடத்தில் கோயில்கட்ட முடியாது

கோட்டை புதிய நினைத்த இடத்தில் பௌத்த, இந்துக் கோயில் கட்ட, ப ள் ளி வா ச ல் கள் தேவாலயங்கள் போன்றவற்றை எவரும் கட்ட முடியாதபடி தடைசெய்யும் சட்டம் ஒன்று உருவாக்கப் பட்டுவருகின்றது. இது சம் பந்தமாக கலாச்சார அமை ச்சர் நடவடிக்கை எடுத்து வருகின்றார் எனத் தெரிக் கின்றது.

மலர் மலராய் மலர்ந்திருக்கு மலர்களிலே நூறு மலர்!
மலர்களிலே சிறந்த மலர் என்ன மலர்?

சிரித்திரன் ஆண்டு மலர்



★ எங்கோண்டு காலம் சமூத்துப் பூங்காவில் நட்டு வளர்த்த தமிழ்ப்மனியின் பேராக்கம்!
★ மகுடியின் ஓசையும் மைனரின் ஆசையும் நகை நகையாம் நம்மை மகிழவைக்கும் நல்லேடு!
★ சுவையான கதைகளும், இதமான கட்டுரைகளும், படிப்போரைத் தொடும் இந்தனை அழுதம்!

விற்பனையாகிறது . . . .

'சிரித்திரன் ஆண்டு மலர்' தனிப்பிரதி பெறவிரும்புவோர் ஒரு ரூபா பெறுமதியான முத்திரை அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

சிரித்திரன் 67, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நோன்பு தொழுகை நேர அட்டவணை

1971- ஒக்டோபர் — நவம்பர் ஹிஜ்ரி-1391 — றமழான்

மாதம்	திகதி — வரை	ஸஹர் + முடிவு	சுபஹ்	சூரிய உதயம்	ளுஹர்	அஸர்	மஃரிப் நோன்பு திறக்கும் நேரம்	இஷா
ஒக்டோபர்	21 - 22	4 - 22	4 - 37	5 - 57	12 - 20	3 - 17	5 - 55	7 - 15
	23 - 26	4 - 21	4 - 36	5 - 56	12 - 20	3 - 16	5 - 53	7 - 13
	27 - 31	4 - 22	4 - 37	5 - 57	12 - 20	3 - 17	5 - 53	7 - 13
நவம்பர்	1 - 5	4 - 23	4 - 38	5 - 58	12 - 20	3 - 17	5 - 52	7 - 12
	6 - 10	4 - 24	4 - 39	5 - 59	12 - 20	3 - 18	5 - 51	7 - 11
	11 - 14	4 - 24	4 - 39	5 - 59	12 - 20	3 - 19	5 - 50	7 - 10
	15 - 19	4 - 26	4 - 41	6 - 01	12 - 20	3 - 19	5 - 51	7 - 11
	20 —	—	பெ	ரு	நா	ள்	—	
ஆறு நோன்பு	21 - 24	4 - 28	4 - 43	6 - 03	12 - 20	3 - 20	5 - 51	7 - 11
	25 - 26	4 - 29	4 - 44	6 - 04	12 - 20	3 - 21	5 - 52	7 - 12
	27 - 30	4 - 30	4 - 45	6 - 05	12 - 20	3 - 12	5 - 53	7 - 13

நோன்பின் நிய்யத்து

"நவைத்து ஸவ்மகதின் அன் அதா இ பர்லி ரமழானி ஹாதிஹிஸ் ஸன(த்) தி லில்லாஹித்த-ஆலா". இந்த வருடத்தின் றமழான் மாதத்தின் பர்ளான நோன்பை அதாவாக நாளை பிடிக்க நிய்யத்துச்செய்கிறேன். அல்லாஹ் வுக்காக.

நோன்பு திறக்கும் பொழுது ஓதுவது

"அல்லாஹும்ம லக ஸும்து வபிக ஆமன்து வ அலைக்க தவக்கல்து வ அலா ரிஸ்கிக அப்தர் து பதகப்பல் மின்னி".

இறைவா! உனக்காகவே நோன்பு நோற்றேன். உன்னையே விசுவாசிக்கின்றேன், உன்பொறுப்பிலேயே எனது சகல காரியங்களையும் விடுகிறேன், உன்னுடைய ஆகாரத்தைக்கொண்டே நோன்பு திறந்தேன். ஆகவே நான் நோற்ற நோன்பை நீ அங்கீகரித்துக் கொள்வாயாக-ஆமீன்.

நோன்பு 17- புனித பத்ரு யுத்தம் நிகழ்ந்த தினம்.

நோன்பு 27- அருள்மறையாம் திருக்குர்ஆன் அருளப்பட்ட தினம்- லைலதுல் கதர் இரவு.

(புனிதரமழானின் பிந்திய பத்துநாட்களில் ஒற்றைப்படவுள்ள நாட்களில் புனித லைலத்துல் கத்ரு ஏற்படலாம் என்பது மார்க்க அறிஞர்களின் அபிப்பிராயமாகும்).

தொகுத்து அனுப்பியவர்: யாழ் முஸ்லிம் சமூகசேவா சங்கக் காரியதரிசி ஜனாப் எம்.ச ஷாஹுல்

சுழிபுரம், புதன்

மலேஷியாவிலுள்ள சைவ அன்பர்களினதும், சமய ஸ்தாபனங்களினதும் அழைப்பை ஏற்று சமயச் சுற்றுலாவை மேற்கொள்ள வித்துவான் கா கி நடராசன் மலேஷியா சென்றுள்ளார்.

சுவீப் முடிவுகள்

கொழும்பு, புதன்

தேசிய லொத்தர் சபையின் 367-வது சுவீப் முடிவுகள் பின்வருமாறு:

1-ம் பரிசு
03 S 0372 ரூ. 88,100

2-ம் பரிசு
07 N 0725 ரூ. 35,240

3-வது பரிசு
30 A 0495 ரூ. 8,810

தலா ரூபா 440-50 சதம் பெறும் 100 டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:

21 A 0529	22 A 0514
29 A 0095	33 A 0267
01 B 0646	06 B 0728
31 B 0345	36 B 0435
14 C 0825	29 C 0955
06 D 0700	10 D 0969
12 D 0789	17 D 0652
27 D 0115	29 D 0429
37 D 0046	25 E 0566
25 E 0611	32 E 0305
38 E 0331	40 E 0997
37 F 0709	25 G 0365
26 G 0736	36 G 0218
05 H 0105	18 H 0861
20 H 0662	01 J 0445
16 K 0381	16 K 0711
05 L 0707	13 L 0115
02 M 0205	13 M 0415
16 M 0785	22 M 0189
26 M 0988	10 N 0366
14 N 0824	16 N 0313
26 N 0127	28 N 0524
32 N 0023	01 O 0208
03 O 0168	09 O 0575
11 O 0489	19 O 0225
32 O 0828	34 O 0194
34 O 0266	34 O 0858
09 P 0654	37 P 0807
02 Q 0020	04 Q 0977
09 Q 0283	29 Q 0613
32 Q 0641	03 R 0096
05 R 0121	06 R 0385
11 R 0280	21 R 0683
29 R 0069	30 R 0387
33 R 0160	02 S 0571
07 S 0171	16 S 0389
20 S 0387	21 S 0607
22 S 0025	32 S 0268
35 S 0080	18 T 0538
29 T 0434	01 U 0119
11 U 0666	22 U 0847
31 U 0681	33 U 0045
36 U 0032	03 V 0656
08 V 0938	28 V 0693
07 W 0401	20 W 0625
24 W 0816	01 X 0543
20 X 0543	27 X 0180
02 Y 0642	03 Y 0242
12 Y 0874	23 Y 0663
03 Z 0224	22 Z 0830

(இவை யாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

31-வது மஹாஜனசம்பத சீட்டிழுப்பு 31-10-71ல் அநுராதபுரத்தில் நடைபெறும்.

விசேட பரிசுகள்

1-வது, 2-வது, 3-வது பரிசுபெறும் டிக்கெட்டுகள், 200 ஆறுதல் பரிசுகள் பெறும் டிக்கெட்டுகளுக்கு உரியவர்கள் தேசிய லொத்தர் சபைக்கு ரூபா 1000/- செலுத்தி ஒரு இறக்குமதி செய்யப்பட்ட கூறை பட்டுச் சேலையை அல்லது ரூபா 200/- செலுத்தி ஒரு இறக்குமதி செய்யப்பட்ட தூய மணிப்புரி பட்டு சேலையைப் பரிசாகப் பெறலாம். இவை "முதல் வருபவருக்கு முதல்தருவது" என்ற அடிப்படையில் வழங்கப்படும்.

பரிசுபெறும் டிக்கெட்டுகள் உட்பட ரொக்கப் பரிசு பெறுவன உள்ளடங்கிய 100 டிக்கெட்டுகளுக்கு உரியவர்கள் தேசிய லொத்தர் சபைக்கு ரூபா 300/-க்கு மேற்படாமல் செலுத்தி ஒரு ரகம் குறிப்பிடாத கைக்கடிகாரத்தையும் ரூபா 60/- செலுத்தி ஒரு அச்சடி நைலெக்ஸ் சேலையையும் பரிசாகப் பெறலாம்.

ரொக்கப் பரிசு பெறும் 203 டிக்கெட்டுகள் உள்ளடங்கிய, 1000 டிக்கெட்டுகளுக்குரியவர்கள், ரொக்கப் பரிசுபெறும் 203 டிக்கெட்டுகள் உட்பட, தேசியலொத்தர்சபைக்கு ரூபா 30/- செலுத்தி ஒரு இறக்குமதி செய்யப்பட்ட பருத்திச் சேலையைப் பரிசாகப்பெறலாம்.

குறிப்பிட்ட அளவு கையிருப்பே உள்ளதால் இவ் விசேட பரிசுகள் "முதல் வருபவருக்கு முதல் தருவது" என்றஅடிப்படையில் 1971 நவம்பர் 3-ந் திகதி முதல் 1971 நவம்பர் 19-ந் திகதிவரை வேலை நேரங்களில், தினசரி அடையாளச் சின்னங்கள் கொடுப்பதன் மூலம் வழங்கப்படும். ஒருவர் ஒரு நேரத்தில் ஒருடிக்கெட்டையே கையளிக்கமுடியும்.

விசேட பரிசுகளுக்குரிய கோரிக்கைகள் தேசிய லொத்தர் சபையின் கிளை அலுவலகங்களிலும் ஏற்றுக் கொள்ளப்படும்.

இன்றே ஒரு மஹாஜன சம்மத டிக்கெட் வாங்கி விசேட பரிசுக்கு உரியவராகுங்கள்

விசேட பரிசாகப் பெறும் பொருட்களை அவை பெறும் இடத்தில் வைத்தே பரீட்சித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். ஏதாவது சேதம் அல்லது பழுது இருப்பின் அவற்றை உடனே திருப்பிக் கொடுத்து விடவும். எடுத்துச் செல்லப்பட்ட பொருட்கள் பின்னர் எம்மால் ஏற்கப்படமாட்டா. பெறும் இடத்திலிருந்து எடுத்துச் சென்றபின் பொருட்களில் ஏதாவது பழுது அல்லது சேதம் இருப்பின் அவற்றிற்கு நாம் பொறுப்பாளிகளல்ல.

தேசிய லொத்தர் சபை

வைத்திய அதிகாரி நியமனம்

சுழிபுரம், புதன்

இம்மாதம் தொடக்கம் பண்டத்தரிப்பு கிராம வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாக டாக்டர் சிறீசுந்தன் நியமிக்கப்பட்டிருக்கிறார். இதுவரை காலமும் இவ் வைத்தியசாலையில் அப்போதிக்கரி ஒருவரே பொறுப்பதிகாரியாக கடமையாற்றி வந்தார்.

ஹாட்லிக்கல்லூரி பழைய... புதிய தலைவர் அமைச்ச...

யாழ்ப்பாணம், வியாழன்

விளையாட்டுத்துறை, ஆட்சிமன்றவிவகார அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளரும் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரிப் பழையமாணவருமான திரு. கே. பி. இரத்தினவக்கா ஹாட்லிக்கல்லூரியின் பழையமாணவர் சங்கத்தின் புதிய தலைவராக ஏகமனதாகத்தெரிவு செய்யப்பட்டார்.

கல்லூரி மண்டபத்தில் சில தினங்களுக்கு முன் நடந்த பழையமாணவர் சங்கத்தின் ஆண்டுக்கூட்டத்தில் பழையமாணவர்கள் மிகப்பெருமளவில் கலந்துகொண்டனர் சங்கத்தின் புதிய தலைவர்பதவிக்கு திரு. இரத்தினவக்காவின் பெயரை யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபரும் சங்கத்தின் தலைவர் பதவியிலிருந்து விலகிச்செல்பவருமான திரு ரி. முருகேசம்பிள்ளை பிரேரிக்க பருத்தித்துறைப்பகுதி மரணவிசாரணை அதிகாரி திரு. ஆர் எஸ் இராமநாதன் அனுவதித்தார் வேறு எவருடைய பெயரும் பிரேரிக்கப்படாததால் திரு இரத்தினவக்கா தலைவராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

சிலமாதங்களுக்கு முன்வர் இதேபழையமாணவர் சங்கம் திரு. இரத்தினவக்காவுக்குப் பாராட்டுவிருந்துபசாரமளித்துக் கௌரவித்தபோது தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த பருத்தித்துறைப் பிரதிநிதி திரு. கே. துரைரத்தினமும் உடுப்பிட்டிப் பிரதிநிதி திரு. கே. ஜெயக்கொடியும் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

பழையமாணவர் சங்க உத்தியோகத்தர் தெரிவு முடிந்ததும் ஓய்வுபெறும் கல்லூரி அதிபர் திரு. எஸ். இரத்தினசபாபதிக்குப் பிரிவுபசாரமளிக்கப்பட்டது. பிரிவுபசாரக்கூட்டத்தில் திரு. இரத்தினசபாபதியின் கல்விப்பணியைப் பலரும் பாராட்டிப்பேசினர் ஓய்வுபெற்ற கல்லூரியின் முன்னாள் உபஅதிபர் திரு. ஆர். எம் குணரத்திரனம் இராமநாதன் கனிஷ்ட பல்கலைக்கழகத்தின் ஓய்வுபெற்ற அதிபர் திரு. எஸ். கந்தசாமி ஆகியோரும் பேசினார் திரு. இரத்தினசபாபதியின் உருவப்படத்தை உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை திரைநீக்கம் செய்துவைத்தார்.

தராதரப் பத்திரமற்ற ஆசிரியர் பதவி

விண்ணப்பித்தவர்கள் பற்றி பண்டிதர் கேள்வி எழுப்புவார்

கோட்டை, புதன்

இவ்வாண்டில் அண்மையில் நடைபெற்ற தராதரப் பத்திரமற்ற ஆசிரியர் பதவி நியமனங்களுக்கு ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம் ஆகிய தொகுதிகளிலிருந்து விண்ணப்பித்தவர்கள் பற்றிய விபரங்களை நாளை நடைபெறும் ஆட்சிமன்றக் கூட்டத்தில் ஊர்காவற்றுறை எம்.பி பண்டிதர் கா பொ இரத்தினம் கல்வி மந்திரியிடம் கேட்பதற்கு முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார்.

இந்த விண்ணப்பதாரர்களில், க பொ த வகுப்பு அல்லது சி யா த வகுப்புப் பரீட்சையில் விசேட திறமைச் சித்திகளும் உட்பட முறையே, 8 பாடங்களிலும், 7 பாடங்களிலும், 6 பாடங்களிலும், 5 பாடங்களிலும், 4 பாடங்களிலும் திறமைச் சித்தியடைந்தவர்களின் பெயர்களையும், விலாசத்தையும் முகவரியையும் அவர்கள் திறமைச் சித்தி அல்லது விசேட திறமைசித்தி பெற்ற பாடங்களையும், கல்விமந்திரி கூறுவாரா? என பண்டிதர் கா பொ இரத்தினம் கேள்வி எழுப்புவார்.

இவர்களில் க பொ த உயர்வகுப்புப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களையும் அவர்களுடைய பாடங்களையும், அப்பாடங்களில் அவர்கள் பெற்ற தரங்களையும், அவர் கூறுவாரா? எனவும் கேட்கவிருக்கிறார்.

கல்விமந்திரியை வரவேற்க பிரேரணை

யாழ்ப்பாணம் வியாழன்

கல்விமந்திரி கலாநிதி அல்ஹாஜ் பதியுதீன் மகமூதுக்கு யாழ் மாநகராட்சிமன்றம் பொதுவரவேற்பு அளிக்கவேண்டுமென்று கோரும் பிரேரணை ஒன்றைக்கொண்டுவருவதற்கு ஜனாப் எம் ஜி பஸிர் முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார். நாளை பிற்பகல் மேயர் அல்பிரட் துரையப்பா தலைமையில் நடைபெறவிருக்கும் மாநகரசபைக்கூட்டத்தில் மேற்கண்ட பிரேரணை கொண்டுவரப்படவிருக்கிறது.

திரு எஸ் ஜே அன்ரனி கீழ்க்காணும் பிரேரணையைக் கொண்டுவருவார். நாட்டில் சோஷலிச சமுதாயத்தைக் கட்டி எழுப்பவும், நாட்டில் உத்தமமான மக்களை உருவாக்கவும் ஓர் உன்னத நடவடிக்கையாகப் பெண்களை மணம் செய்கிக்கும் போது சீதனம் கோரப்படுவதையும், சீதனம் கொடுப்பதையும் தடைசெய்யும்வகையில் சட்டங்களை ஆக்கும்படி பிரதம அமைச்சரையும், சமூகசேவைகள் அமைச்சரையும் இச்சபை வேண்டுகொள்வதெனத் தீர்மானிக்கிறது.

······

அரசாங்க அதிபர்களுக்கு கூடுதலான அதிகாரங்கள்

கோட்டை, புதன்

புதிய மாவட்ட நிர்வாக அமைப்பின் கீழ் அரசாங்க அதிபர்களுக்கு கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்படவிருக்கிறது.

பொதுநிர்வாக உள்நாட்டு உள்ளூராட்சி மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவின் அதிகாரத்தை பரவலாக்கும் திட்டத்தின் கீழ் இந்த அதிகாரங்கள் அரசாங்க அதிபர்களுக்கு வழங்கப்படும்.

தேசிய அபிவிருத்தித் திட்டத்தை அமுல் செய்யும்போது, மக்களிடமிருந்து கிடைக்கக்கூடிய கூடுதலான ஒத்துழைப்பை பெறுவதற்கு இந்த நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக கூறப்படுகிறது.

அரசாங்க அதிபர்கள் அபிவிருத்திகமிஷனர்களாக கருதப்படுவார்கள் அபிவிருத்தித்திட்டத்தை அபிவிருத்தி செய்யும் முக்கிய பொறுப்பாளராக அவர்கள் விளங்குவார்கள் எனினும் கூடுதலான வேலைகள் இருக்காது. அவர்களது சில வேலைகள் காரியாதிகாரிகளிடம் பகிர்ந்தளிக்கப்படும். இதன் காரணமாக அமைச்சர் 110 புதிய காரியாதிகாரி பிரிவுகளை உருவாக்க தீர்மானித்துள்ளார்.

······

மகஜர்

சுழிபுரம், செவ்வாய்

சுழிபுரம் சத்தியக்காட்டு சந்தையில் உத்தரவின்றி இறைச்சி விற்பனை செய்வதையும் சந்தை வளவில் ஆடு வெட்டப்படுவதை உடன் நிறுத்துமாறும், கோரும் மகஜரொன்றை இப்பகுதி மக்கள் சுழிபுரம் கிராமசபைத் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

······

பொலிஸாரிடம் சிக்கினர்

தாவடி, புதன்

வீட்டின் வாசற் கதவிலுள்ள அழைப்பு மணியின் பொத்தானை அழுத்தி, இடைவிடாது ஒலிக்கும்படிசெய்து சென்றுவந்த மாணவர்கள் பொலிசாரிடம் கையும் மெய்யுமாகப் பிடிபட்டனர். பொலிசார் இவர்களை எச்சரித்து அனுப்பினர்.

கொக்குவில் பகுதியில் பிரதான வீதியொன்றில் உள்ள ஒரு வீட்டில் இவர்கள் இவ்விதம் செய்து வந்தார்களாம். பிரத்தியேக கல்விநிலையமொன்றில் பயின்று வருவதாகக் கருதப்படும் இவர்கள் பகல் சுமார் 11 மணிக்கு மேற்படி வீதியால் செல்லும் போதுவீட்டு வாசலிலுள்ள மணியை அடித்துச் செல்வதாகவும் இடையிடையே பலத்த குர...

இடமாற்றம்

சங்கானை, புதன்

திருக்கோணமலை இந்துக் கல்லூரியில் பதில் அதிபராகக் கடமையாற்றிய திரு. ஆர். கிருஷ்ணபிள்ளை இம்மாதம் ஒமந்தை மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரியில் கடமையாற்றிய செல்வி எல். சின்னத்தம்பி இம்மாதம் தொடக்கம் இராமநாதன் மகளிர் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

திருத்தப்பட்டது

வேரதீவு, புதன்

புங்குடுதீவு-வேலணை அம்பலவாணர் பாலம் பொதுமராமத்துப் பகுதியினரால் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இதனால் இதுவரை வாகனங்களும், பாதசாரிகளும் அடைந்து வந்த இன்னல் தீர்ந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பமாணவர் சங்கப் ச்சர் இரத்தையாகா!

செகோஸ்லவாக்கியாவிலுள்ள

யு. எஸ். அதிகாரிக்கு வெளியேற உத்தரவு

பிராக், அக். 20

பிராக்கிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் முதல் காரியதரிசியை விடுமுறை வாரதவர் என அறிவித்து 48 மணி நேரத்தில் நாட்டை விட்டு வெளியேறும்படி செகோஸ்லவாக்கிய அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.

இந்த அதிகாரி உளவு பார்ப்பதில் சம்பந்தப்பட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறார்.

செகோஸ்லவாக்கியாவில் சமீபத்தில் 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட எழுத்தாளர் ஒருவருடன் மேற்படி அமெரிக்க அதிகாரி தொடர்பு கொண்டிருந்தாராம்.

"பிராங்டவ்வைப் பின்பற்றி சேவை செய்வோம்"

மரியாயின் சேனைப் பெண்விழாவில் யாழ். ஆயர்

யாழ்ப்பாணம், அக். 20

யாழ்ப்பாணம் மரியாள் ஆலயத்தில் நடைபெற்ற மரியாயின் சேனைப் பெண்விழாவில் திரு. பிராங்டவ் ஏப்படி மரியாயின் தாழ்ச்சியைக் கண்டு வாழ்ந்தாரோ அவ்வாறு நாடும் நிறைந்த தாழ்ச்சியோடு பணிபுரிய வேண்டும் என்று யாழ். ஆயர் அதிவந்த ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை மரியாயின் சேனைப் பொன்விழாவில் பேசுகையில் கூறினார். மரியாயின் சேனை 50 ஆண்டுப் பொன்விழா கடந்த ஞாயிறு திங்கள் இருதினங்களிலும் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் கொண்டாடப்பட்டது. விழாவை வாட்டி நடைபெற்ற பொதுக்கூட்டத்தை அதிவந்த ஆண்டகை தலைமைதாங்கி உரையாற்றினார்.

இலங்கை சைனத் தூஸ் தலைவர் திரு கொல்வின் மென்டிஸ் திரு பிராங்டவ்வின் உருவப்படத்தைத் திரைநீக்கம் செய்து வைத்துப் பேசினார். எதிர்காலத்தில் நற்செய்தியைப் பரப்பும் பணியில் நாம் ஆழமான மறுமலர்ச்சியுடன் செயல் படவேண்டும்என ஆயர் கொன்னார்.

யாழ். ஆனைக் கோட்டை திறந்தவெளியரங்கில் எண்ணிலடங்கா மரியாயின் சேனையினர் கலந்துகொண்ட இவ்விழாவில் நாடளாவிய ரீதியில் இருந்து வந்திருந்த மரியாயின் சேனை அங்கத்தவர்களுக்கு விருந்துபசாரம் அளிக்கப்பட்டது.

நாளை மறுதினம் எல்லை மைக்கல் இரண்டாம் நாள் விழாவைத் தொடக்கிவைத்து தமிழ்ப்பேசும் பொழுது குறிப்பிட்டார்.

இதனைத்தொடர்ந்து யாழ் மேற்றிராசனத்திலுள்ள அனைத்துக் குருக்களும் கன்னியர்களுக்கும் ஒரு விருந்துபசாரம் நடைபெற்றது. மாலையில் புனித பத்திரிசியார் கல்லூரிமண்டபத்தில் இரண்டாம் பேச்சுப்போட்டியும் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. வீட்டுரைப் போட்டியிலும் பேச்சுப் போட்டியிலும் பரிசு பெற்ற மாணவர்களுக்கு இலங்கைசெஞ்சிலுவைச் சபை ஆயர் இல்லத்தில் தூஸ் சபை இயக்குநர் அருட்பணி பிதா இக்னேஷியஸ் அவர்களால் பரிசில்கள் வழங்கினார்.

மரியாயின் சேனை பொன்விழா செயலாளர் திரு மோ. தார்சியஸ் நன்றி தெரிவித்துப்பேசினார். ஆசனக் கோவிலில் நடைபெற்ற 15 குருமாரின்கூட்டு நன்றியறிதல் திருப்பலியுடன் விழா முடிவடைந்தது.

"யாழ். ஆஸ்பத்திரியில்

போதிய தாதிகளை நியமிக்கவும்"

யாழ்ப்பாணம், வியாழன்

"யாழ்ப்பாண அரசினர் வைத்தியசாலையில் தாதிகள் குறைவாக இருக்கிறார்கள். இன்று போதிய தாதிகளை உடனடியாக நியமித்து நோயாளிகளின் குறையை நிவர்த்தி செய்க."

இவ்வாறுகோரி மாற்றுமத ஆட்சி மன்ற உறுப்பினர் கௌரவ அமைச்சர் திரு. டபிள்யூ பி ஜி ஆரியதாசாவுக்கு அனுப்பியுள்ள தந்தி மூலம் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மானிப்பாய், கண்டி, இரத்தினபுரி, காலி, குருநாகல் ஆகிய பகுதிகளுக்கு ஒப்பிடுமிடத்து தாதிகள் நியமனத்தில் தமிழ் பகுதிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் இதனைத் தவிர்க்க முகமாக உடனடியாக யாழ்ப்பாணம் திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் தேவையான தாதிகளை நியமிக்கும் படியும் கேட்டுள்ளார்.

இதன்படி யாழ்ப்பாண அரசினர் வைத்திய சாலையில் 78 தாதிகள் நியமிக்கப்பட வேண்டுமெனவும் தெரிய வந்துள்ளது. சுகாதார சேவைத்திணைக்கள அதிபர் டாக்டர் கே. ராஜசுந்தரம் அவர்களும் இவ்வாறுகோரும் தந்தி அனுப்பப்பட்டுள்ளது.

வேணுகானப் பிரவாகம்

சென்ற 15-ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை யாழ் சங்கீத சபையின் 'சுருதி மன்றம்' மண்டபத்தில் 'வேணுகான பிரவீன' மூர்த்தி ஐயரின் வேணுகானப் பிரவாகம் தங்கு தடையின்றி பெருக் கெடுத்து ஓடியபோது அதைத் தடுத்து நிறுத்த முயன்றவர்கள் இசை ரஸிகர்கள் அல்ல. அது பேய்மழை. இதன் பலனை அது காட்டி வழிந்தோடும் வெள்ளப் புதுத் தேங்கி வேல வளம் பெருக்கும் பிரதேசப் பகுதிகளில் காற்றோடு காற்றாக கலந்து மறைந்துவிட்டது.

"சர்வாசி கூட நிரம்பாத சுருதி மன்றம்' மண்டபத்தைப் பார்த்து விட்டு நான் யாழ் சங்கீத சபை காரியதரிசியை நோக்கி "ஐயோ, ஏன் அழைத்தீர்கள்?" என்று கேட்டேன். அவர் அழைத்தோம் என்று சொன்னார். என்ன செய்யலாம்? ஏன் கச்சேரியை ரத்து செய்யவில்லை என்று பல அன்பர்கள் என்னைப் பிடித்துப் பிடுங்கினார்கள். ஆனால் கச்சேரியை ரத்து செய்வதால் ஏற்படக்கூடிய நஷ்டத்தை ஈடுசெய்வதற்கு சென்ற ஏப்ரல் குழப்பங்களுக்குப்பிறகு நாம் நடத்தும் இரண்டாவது கச்சேரி இது. ஆகவே வரவேற்பு என்னும் நான் என்ன செய்யலாம்?

சங்கீத சபைக் கச்சேரிகளுக்கு எல்லோரும் ஆலு மதிக்கப்படுவதில்லை. அது பத்தாதற்குமேல் குறிப்பிட்டும். மூர்த்தி ஐயர் வேணுகான மழையை வர்ஷித்துக்கொண்டிருந்தபோது ஒரு குளுமை நகரில் பிறக்கிறது. அவரது ராக ஆலாபனைகள் மிகவும் இனிமையாகவிருந்தன. அடுத்து அவர் வாசித்த பிலஹரியும் வராளியும் சங்கராபரணமும் சபையோரின் மனதை மாரார்களைப் பெற்றன. கிட்டத்தட்ட முன்று மணிநேரம் நடந்த கச்சேரியில் மோஹன வர்ணம் தொடக்கம் நிருப்புகழ் வரை கொஞ்சமேனும் சளிப்புத் தட்டவில்லை.

ஜெயமனோகரி, ஹம்சநாதம், சரஸ்வதி, பிலஹரி தர்பார், சங்கராபரணம் முதலிய ராகங்களில் உருப்படிகள் வாசிக்கப்பட்டன. "சுவரராகஸுதா" என்ற தியாகராஜ கீர்த்தனை பிரதானமாயிருந்தது. காசல்பதி ராகத்தில் திரிஜாதி திரிபுட தாளத்தில் கச்சேரி மாக அமைந்திருந்தது மல்லாரி. முறையாக நிரவல் பண்ணி நிரை நடையிலும் வாசித்தார். மல்லாரியில் வந்த ராகமாலிகையில் தோடி சௌராஷ்டிரம், வராளி, நீலாம்பரி முதலிய ராகங்களை அழகாயிருந்தன.

ஐயருடன் கூட வாசித்த எஸ். சூரியநாராயண் சிறிதும் சோடைபோகாமல் ஸ்வரம் கூட நறுக்காக வாசித்து கச்சேரிக்கு மெருகு கொடுத்தார். பக்கவாத்தியமாக வயலின் சர்வேஸ்வர சர்மாவும் மிருதங்கம் கிளாரசாவும் மிகவும் அனுசரணையோடு வாசித்து கச்சேரியை சிறப்பித்தனர். வாத்தியங்களின் தூணாக நின்று வாசிப்பதற்கு அவ்வளவு லயமானவர்கள். இவற்றுள்ளும் புல்லாங்குழல் சபாக வாசிப்பது இலகுவான காரியமன்று, ஆனால் தூணாக்கருவிகளில் மிகவும் இனிமையானது புல்லாங்குழலே. வாசிப்பதற்கு கடினமான தாதபோதும் இந்த வேய்ங்குழலை மெயலுவோர் வாழ்ப்பாணத்தில் மிகக் குறைவு. பிரயாசை எடுத்து அதை முறையாக சாதகம் செய்து வித்தகர் ஒருவரை அழைத்து வந்திருக்கலாம். எப்படியோ மூர்த்தி ஐயரும் அவரது சிஷ்யர்களும் உதாரணமாயிருக்கிறார்கள்.

"காங்கிரஸ் கொள்கைகளை மீறி நடக்கவில்லை"

வட்டு. எம். பி.

தமிழ்க் காங்கிரஸ் கொள்கைகளை மீறி நடக்கவில்லை. இவ் விடயத்தை நிர்வாகசபைக்கு விடமுன்னர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் எம் முடன் கலந்தாலோசித்திருக்கவேண்டிய தரபு. தான் அவரை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஆலோசனை கேட்டுள்ளேன் என வட்டுக்கோட்டை எம் பி திரு ஏ. தியாகராசா மேலும் தெரிவித்தார்.

அரசில் புதன் கிழமை

நிர்வாகிகள் தெரிவு

சுழிபுரம், புதன்

மாதகல் துணைச் முருகமூர்த்தி ஐக்கிய நாணய சபை புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: வ. தனராஜன், உபதலைவர்; வி. முத்தையா செயலாளர்; நா. வித்தி லிங்கம், உபசெயலாளர்; ஆ. பொன்னம்பலம் தனராஜ் தா, கந்தையா நிர்வாக சபை உறுப்பினர்; இ. நாகலிங்கம், மா. பதிமநாதன்.

சுபீலைல்

தொற்றுத்தடை மருந்து

சுபீலைல் தொற்றுத்தடை மருந்து
குளிக்கும் அறை, வடிகால், கட்டிடத்தளம் ஆகியவற்றில் உபயோகிக்கச் சிறந்த நவீன ஆராய்ச்சியின்
புதிய படைப்பு. சுபீலைல் வன்மையுள்ளது
பாதுகாப்பானது.
எங்கும் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ். நகரில் ரகுநாதன் பதிப்பகக் கிளை இன்று திறப்புவிழா: பெரியார்கள் ஆசி

'நாவலர் பணியினைத் தொடர ஆதரவு நல்குவோம்'

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் பொதுச்செயலாளரும் காணி நீர்ப்பாசன அமைச்சின் நிரந்தரச் செயலாளருமான திரு. ம. ஸ்ரீகாந்தா தமது வாழ்த்துச் செய்தியில் தெரிவிப்பதாவது:-

ரகுநாதன் பதிப்பகத்தினர் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் ஒரு கிளை தொடங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். நாவலர் பெருமானின் அரும்பெரும் படைப்புக்கள் பலவற்றினை இன்று நம்மவருக்குக் கிடைக்கச்செய்த பெருமை ரகுநாதன் பதிப்பகத்தாருக்குண்டு. இலாபமீட்டுவதை மட்டுமே நோக்கமாகக் கொள்ளாது சைவத்தையும் தமிழையும் பெரிதெனக் கருதி செயற்படுவோர் பதிப்பகத்துறையில் மிகச்சிலரே அவர்களில் ரகுநாதன் பதிப்பக உரிமையாளர் திரு. க. பத்மநாதன் முக்கியமானவர் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை. நல்லூர்க்கந்தன் திருவிழாவின்போது நாவலர்பெருமானின் சிலையருகிலேயே ஒரு நூல் விற்பனை நிலையத்தினை நிறுவி நாவலர்படைப்புகளை விற்று அதன்மூலம் திரட்டிய பணமனைத்தையும் நாவலர்சபைக்களித்த பெருந்தன்மையுடைய திரு. க. பத்மநாதனின் இப்புதிய முயற்சி வெற்றிபெற எனது மனமார்ந்த வாழ்த்துக்கள் உரித்தாகுக.

நாவலர் பெருமானின் படைப்புக்கள் இந்தியாவில் மட்டுமே அச்சானது வருத்தத்துக்குரியது. மேலும் இவற்றினை இந்தியாவினின்றும் வரவழைக்க முடியாத ஒரு நெருக்கடியான நிலை ஏற்பட்டுள்ளது. எனவே நாவலர் பெருமான் நிறுவிய நாவலர் அச்சகத்தின் பணியினை ரகுநாதன் பதிப்பகத்தார் தொடர்ந்து நடத்துவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு அதற்கு ஆதரவுதரவேண்டியது ஈழத் தமிழர்களாகிய எமது கடமையாகும்.

பண்டிதமணி வாழ்த்துகிறார்

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் வாழ்த்துச் செய்தி வருமாறு:

தமிழ் மக்களுக்கும் சைவ மக்களுக்கும் பாலர் தொடக்கம் பண்டிதர் உட்பட விருத்தர் பரியந்தம் பாவருக்கும் பயன் செய்யும் நூலுரைகளைப் படிக்கிரமத்தில் வெளியிட்டவர்கள் நாவலர் அவர்கள், வாழ்வாங்குவாழ்வதற்கு வழிசெய்யவைகள் அவைகள்.

ஏடு தொடங்கவரும் குழந்தைகள் தொடக்கம் எவரையும் நாவலர் முதலாம் பாலபாடம் வாங்கி வரும்படி சொல்லுவதில் நான் தவறுவதில்லை. சுவர், திறப்பு சிரார்த்தம் என்ற சொற்களையும் இவைபோன்ற பல சொற்களையும் முதலாம் பாலபாடம் பயிற்சியில்லாதவர்களால் திருத்தமுற உபயோகிக்க முடிவதில்லை. சிறந்த வசன வளர்ச்சிக்கு வேண்டிய மொழித்தூய்மை முதலாம் பாலபாடத்தில் தொடங்குகிறது. இவ்வாறே இலக்கணம் இலக்கண வினாவிடையிலும் நீதி ஆத்திசூடியிலும், சைவம் சைவ வினாவிடையிலும் தொடங்குகின்றன.

மணப்பெண்ணுக்கு நான்காம் பாலபாடமும் சைவ வினாவிடையும் மணமகன் அனுப்ப வேண்டும். நாவலர் சரித்திரங்களும் நாவலர் பிரபந்தமும் மணமகனிடம் உண்டோ என்று பெண்வீட்டார் விசாரிக்க வேண்டும்.

நாவலர் பிரபந்தத்தில் "யாழ்ப்பாணச் சமய நிலை" என்ற கட்டுரையைப் படியாத ஒருவர் தம்மை யாழ்ப்பாணத்தவர் என்பது பெரிதும் வெட்கம்.

என்னையடுப்பவர்கள் "எங்கே கிடைக்கும்" என்று கேட்கும் கேள்விக்கு இனி விடை எளிது.

நாவலர் நூல்களையும் வேறுபலதிறத்துப் பயன்படும் நூல்களையும் எளிதிற் பெறுவதற்குபகாரமாக பிரசித்தி பெற்ற கொழும்பு ரகுநாதன் பதிப்பகம்யாழ்ப்பாணத்தில் அதன் கிளையாக ஒரு தாபனத்தை அமைக்கின்றதென்றறிகிறோம். வெகு சந்தோஷம். அத் தாபனத்தின் அபிவிருத்தி மேன்மேல் வளர்ந்தோங்குவதாக.

'தமிழன்னையை அணிசெய்வதை குறிக்கோளாய்க் கொண்டவர்கள்'

யாழ் மாநகர துணை முதல்வர் திரு. ஆ. துரைராஜசிங்கம் வாழ்த்து:

வியாபார நோக்கை மட்டும் அடிப்படையாகக்கொண்டு இயங்கும் நிறுவனம் அல்ல இரகுநாதன் பதிப்பகம். ஏடுகள் ஆக்குவோம், இலக்கியப்பணி செய்வோம் ஈடுஇணையற்ற தமிழன்னை எழில்பெறவேண்டுமென மேலும் அணிமணி சூட்டுவோம் என்பதொன்றே குறிக்கோளாக இயங்கிவருவது அது. அப்பேர்ப்பட்ட ஒரு நிறுவனத்திற்கு யாழ்ப்பாணத்தில் ஒரு கிளை நிறுவனம் இல்லையே என ஏங்கியிருந்தோருக்கு ஒரு வரப்பிரசாதமாக, யாழ் நகரில் ஒரு கிளையை நிறுவுவதற்கு ரகுநாதன் பதிப்பகத்தார் முன்வந்திருக்கிறார்கள் என்பது தமிழ் வாசகர்களுக் கெல்லாம் தித்திக்கும் தேன் செய்தியாகும். யாழ்ப்பாண மக்கள் சார்பில் ரகுநாதன் பதிப்பகத்தாரைப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

'தமிழுலகம் மறக்காது'

"தேசியவீரர் தவத்திரு ஆறுமுகநாவலரைப் போற்றும் ரகுநாதன் பதிப்பகம், புத்தகப்பண்ணை நல்லமுறையில் அமைய எம் நல்வாழ்த்துக்கள்" என்று நடைமுறைத் தமிழ் இயக்கத்தலைவரும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை அமைப்பாளருமான திரு. க. இளையதம்பி வாழ்த்துகிறார்

'நாவலர் பெருமானுக்கு சிலை எடுக்கும் முயற்சியில் யாம் ஈடுபட்டிருந்தகாலை நாவலர் ஐயர் அவர்களை வேறு ஒரு வழியில் தமிழ் மக்களை நினைவுகொள்ளச் செய்த வணிகப்பெருமகன் ரகுநாதன் ஸ்தாபனத்தின் உரிமையாளர் திரு. கே. பத்மநாதன் தமது வர்த்தக ஸ்தாபனத்தின் வாயிலாக கொழும்பில் செய்துவந்த

[7-ம் பக்கம் பார்க்க]

மெய்கண்டான் அதிபர் வாழ்த்து

நாவலர் சபையின் பொருளாளரும் மெய்கண்டான் அச்சாலய அதிபருமான திரு. நா. இரத்தினசபாபதி வாழ்த்துகிறார்.

நாவலர் பெருமானின் நூல்களைப் பரப்புவது நாவலர் பெருமானுக்குச் செய்யும் அரிய தொண்டாகும். மலிவு விலையில் அவர் நூல்களை மக்களுக்கு கிடைக்கச் செய்து சேவையாற்றிவரும் ரகுநாதன் பதிப்பகத்தினர் இப் பணியை மேலும் விரிவாகச் செய்வதற்கென இன்று யாழ்நகரில் கிளையொன்று திறப்பதையறிந்து மகிழ்ச்சியடைகிறேன் அவர்கள் ஸ்தாபனம் மேலும் வளர்ச்சியடைந்து சிறந்து விளங்க அவர்களை இதய பூர்வமாக வாழ்த்துகிறேன்.

யாழ்நகர முதல்வரின் வாழ்த்து

கொழும்பிலுள்ள ரகுநாதன் பதிப்பகத்தார் தமிழ் வளர்ச்சிக்காகவும், தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்காகவும் அரிய பணி ஆற்றுகின்றார்கள். அவர்களின் புத்தக வெளியீடுகள் தமிழ் பேசும் மக்களை மிகவும் கவர்ந்துள்ளன நல்லூர்க் கந்த சாமி கோவில் திருவிழாவின்போது ஒரு தற்காலிக கிளையை நல்லூரில் நிறுவியதன் மூலம் யாழ்ப்பாணத்தில் ஒரு நிரந்தர நிலையம் நிறுவ வேண்டிய அவசியத்தை உணர்ந்து இப்போது செயல்படுத்தியுள்ளார்கள்.

யாழ்ப்பாணத்தில் நிறுவப்படும் ரகுநாதன் பதிப்பகத்தாரின் கிளை நிலையம் தமிழ் பேசும் மக்களுக்கு ஓர் அரிய வரப்பிரசாதமாகும். யாழ்ப்பாண மக்கள் இதனை நன்கு பயன்படுத்துவார்கள் என நம்புகின்றேன்.

(அல்பிரட் த. துரையப்பா)
முதல்வர்
யாழ். மாநகராட்சி மன்றம்.

ரகுநாதன் பதிப்பகத்தார்
யாழ்ப்பாணத்தில்
தமது புத்தகப் பண்ணையை
21-10-71-ல் தொடங்கிவைப்பதையிட்டு
மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்
அவர்களுக்கு எமது நல்லாசிகள்
உரித்தாகுக!

அமுதவாக்கு

பிரம்பும் தடியும் உபயோகிக்காமல் கோபமும் குறையும் இல்லாமல், சம்பளத்தையும் வெகுமதியையும் எதிர்பாராமல் நமக்குக் கற்பிக்கும் சிறந்த ஆசான் நூல்களே, நூல்களைச் சென்றடைந்தால், உறங்காமல் சோர்வுகொள்ளாமல் அவை நமக்கு அறிவு கற்பிக்கும். நீங்கள் தேடும்போது எதையும் மறைக்காமல் அளிக்கும். நீங்கள் பெருந்தீங்கு செய்தாலும் வசைமொழி கூறாமல் உங்கள் அறியாமையைக் கண்டு நகைக்காமல்! கற்பிப்பனவும் நூல்களே. —றிச்சேட்-டி-பியூறி.

மில்க்வைற் சோப் மேலுறைகளை அனுப்பி அறிவுநூல்களை வாங்கிப் படியுங்கள்.

மில்க் வைற்
சோப் தொழிற்சாலை
த. பெ. இல. 77 யாழ்ப்பாணம்.

மக்களின் ஆதரவு பெருகி
வளரும்
ரகுநாதன் பதிப்பகம்
யாழ்ப்பாணக் கிளை
திறப்பு விழாவிற்கு
எமது ஸ்தாபனத்தின்
நல்வாழ்த்துக்கள உரித்தாகுக
என். முருகன்
300, கே. கே. எஸ். ரோட் யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணத்தில் கிளை ஸ்தாபனம் ஆரம்பிக்கும்
ரகுநாதன் பதிப்பகத்தாருக்கு
எனது நல் வாழ்த்துக்கள்
நா. இரத்தினசபாபதி
மெய்கண்டான் அச்சகம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாவலர் சபைத் தலைவரின் மகிழ்ச்சியும் ஆசியும்



ரகுநாதன் பதிப்பகத்தார் தமது சேவையை விஸ்தரிக்கும் நோக்கமாக யாழ்ப்பாணத்தில் இன்னொரு கிளை திறக்கவிருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

இவர்கள் தந்தையைப்போலவே வளர்ந்த தம்பி டாக்டர் இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

என்று ஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் தலைவரும் இளைப்பாறிய நீதிபதியுமான திரு. சிவசுப்பிரமணியம் தமது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். அவரது செய்தியில் மேலும் குறப்பிடுவதாவது:

இன்று இலங்கைத் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் நாவலர் உணர்வு கற்றவரை பின்றிப் பொங்கி நிற்கிறது. நாவலர் நினைவாகவே மணிமண்டபம் நூலகம் முதலியனவற்றை அமைத்தும், நாவலர் பெருமானைக் கௌரவித்து அவர் உழைத்துத் தொண்டாற்றிய அரசாங்கத்தைக் கொண்டு வெளியிடும் எம் தமிழ்மக்கள் நாவலரை நினைத்து போற்றிப் பெருமிதமடைகின்றனர்.

நாவலர் பெருமானை நினைந்து மகிழ்வதுடன் நிற்காமல் நாம் அவரின் கருத்துக்களை நன்கு படிக்க வேண்டும்; கைக்கொள்ள வேண்டும் பரப்ப வேண்டும். அதுவே நாம் செய்யவேண்டியதிற்த பணியாகும்.

நாவலர் கருத்துக்களைப் படித்தறிவதற்கு வேண்டிய நூல்கள் கிடைப்பதற்கு ஏராளமுள்ளன. எனினும் இதற்கென்றமைந்த சிறப்பான முறையில் விற்பனை செய்து வருபவர்கள் ரகுநாதன் பதிப்பகத்தினர். இவர்களின் இப்பணி எமதுசமயத்துக்குப் பேருதவியாக அமைந்திருக்கின்றது.

.....

தமிழுலகம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பணியைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலும்செய்ய முன்னின்றவர்கள் என்றும் அன்புரைத் தமிழ் உலகம் மறக்காது" என்று அவர் தமது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருந்தார்.

யாழ். நாவலர் விழாவில் ரகுநாதன் பதிப்பகத்தாரின் புத்தகக் கண்காட்சி

புதிய தங்க மாளிகை

பிரதான வீதி, கிளிநொச்சி

யாழ். மக்களின் அறிவு வளர்ச்சிக்கு சேவை செய்து வந்த இவ் ஸ்தாபனத்தை தொடர்ந்து இருக்கும் ரகுநாதன் பதிப்பகத்தின் திறப்பு விழாவிற்கு எமது உளமார்ந்த வாழ்த்துக்கள்

நம்பிக்கை நாணயம் நயமிக்க நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம். ஆடர் நகைகள் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

அதிபர்

புதிய தங்க மாளிகை

கிளிநொச்சி

யாழ்ப். நகரில் ரகுநாதன் பதிப்பகத்தாரின் இவ் ஸ்தாபனத்தாருக்கு எனது

நல் வாழ்த்துக்கள்

தரன் ஆட்ஸ்

(ராஜா தியேட்டர் முன்)

72|3, கஸ்தூரியார் வீதி; யாழ்ப்பாணம்

3 மணி நேரத்தில் றபர்சீல்

செய்து கொடுக்கப்படும்

மற்றும் சினிமா சிலைட்ஸ், போட்,

புளொக் தயாரிப்பாளர்கள்

சகல விதமான ஒபிஸ் வேலைகளும் செய்யப்படும்.

எம்மிடம் தின, வார, மாத பத்திரிகைகள் சஞ்சிகைகளும் மற்றும் பொழுதுபோக்கு கதைப் புத்தகங்களும், சமய நாவல்கள், சினிமாப் பாடலிப் புத்தகங்களும் மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்

பாடசாலை புத்தகங்களு உபகரணங்களும் கிடைக்கும்

ராஜன் நியூஸ் ஏஜென்சி

12, பஸ்நிலையம் — யாழ்ப்பாணம்.

கிளை: ராஜா புரடக்ஸ்

பிஷப்ஹார் வீதி — திருநெல்வேலி — யாழ்ப்பாணம்

தீபாவளி, கிறிஸ்மஸ், பொங்கல்,

புதுவருட வாழ்த்துக்கள் வெளியீட்டாளர்

எங்களிடம்

கூப்பன் பிடவைகளும்

கைத்தறி நெசவுத் துணிகளும்

இன்னும் ஏராளமான

புடவைத் தினுசுகளும்

சாய்ப்புச் சாமான்களும்

மிகுந்த சகாயமாகப்

பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ வரதாஸ்

(புடவை மாளிகை)

277 மனோகர நிலைய வீதி,

யாழ்ப்பாணம்.

ரகுநாதன்

பதிப்பகத்தாருக்கு

எமது

வாழ்த்துக்கள்

துரைராஜா

கட்டடக்

கலைஞர்கள்

பாண்ஸ் பிளேஸ்,

கொழும்பு—7,

பிரதான வீதி,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

கடமைதான் உரிமையை உருவாக்குகிறது. நமது கடமைகளைச் செய்தோமானால் உரிமை களைத் தேடிச் செல்லவேண்டியதில்லை.

—மகாத்மாகாந்தி.

சுதந்திரன்

Eelanadu National Tamil Daily
Telegrams: "ELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

சுதந்திரன் திரேதியிலுள்ள வருஷ ஐப்பசி மாதம் 4-ந் திகதி (21-10-71)

பழைய மாணவர் காட்டும் வழி

தேசிய ஐக்கியம் பற்றிப் பலரும் மேடைப்பேச்சுக்களுக்கு குறிக்கை விடுவதுடனும் பெருமைகொள்ளும் இக்காலத்தில் வெறும் வாய்ப்பேச்சிலும் ஆவல் செலுத்தாது தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்த முடியுமென்பதற்கு வழிகாட்டியிருக்கும் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினர் பாராட்டுக்குரியவர்கள்.

வடபகுதியின் பிரபல கல்லூரிகளில் ஒன்று பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி. இக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஆண்டுக்கூட்டம் சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்றது! இக்கூட்டத்தில் பழைய மாணவர்கள் மிகப்பெருமளவில் வந்துசென்றனர். சங்கத்தில் புதுவருட உத்தியோகத்தர்கள் தெரிவு நடைபெற்றது. கூட்டி மன்ற விவசாய, வீடமைப்புத்துறை அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிப் பொதுச்செயலாளரும் தெல்லிப்பளையில் வாழும் பெரும் வசதியுள்ள இந்தியத்தோற்றத்தையுடைய திரு. கே.பி. இரத்தினசபை சங்கத்தின் புதிய தலைவராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். தலைவர் பதவியிலிருந்து விலகிச் செல்லும் பாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் திரு. வி. முருகேசம்பிள்ளை, திரு. இரத்தினசபையின் பெயரைப் பிரேரிக்க பருத்தித்துறைப்பகுதி திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. சு. எஸ். இராமநாதன் வழிமொழிந்தார். வேறு எவரது பெயரும் பிரேரிக்கப்படாததால் திரு. இரத்தினசபை தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். ஹாட்லிக்கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின் இந்த நல்லசெயலும் பெருத்தபெருமையும் சமீப காலத்தில் நமது நாட்டில் காணக்கிடைப்பதரிய ஒரு விஷயம்.

சில மாதங்களுக்கு முன்னர் இக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் திரு. இரத்தினசபைக்கு பாராட்டுவிழாவெடுத்துச் சௌரவித்தது. இவ்வைபவத்தில் தமிழரசுக்கட்சியைச்சேர்ந்த உடுப்பிட்டி, பருத்தித்துறை முதலான தொகுதிகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டதும் தேசிய ஒற்றுமையில் இப்பகுதி மக்களுள்ள நம்பிக்கையை எடுத்துக்காட்டுவதாகும்.

"இலக்கியமும் இருகோடாலியும்" என்ற மகுடத்தில் 1958-ம் வருடத்திய வகுப்புக் கலவரச் சம்பவத்தின் பின் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் நடந்த பரிசளிப்பு விழாவில், அக்கல்லூரியின் எலிஷ்ட பிரிவுத் தலைமை ஆசிரியராகப் பலவருடங்கள் பணியாற்றிய திரு. சிவகுருநாதனே பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். செய்த தவஞ்சென்ற ஆனந்தாக்கல்லூரி அதிபர் திரு. எஸ். ஆர். விஜயதிவாகரின் பெருந்தன்மை தேசிய ஐக்கியத்தில் அவருக்கிருந்த நம்பிக்கையை எடுத்துரைத்தது. அவர் காட்டிய முன்மாதிரியை மற்றும் பலர் பின்பற்றத் தவறிவிட்டனர்.

இப்போது பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினர் தேசிய ஒற்றுமைக்கு முன்மாதிரி காட்டியிருக்கின்றனர்.

திரு. இரத்தினசபைபோன்ற அமைச்சரும் ஆளும் கட்சியின் செயலாளர்களும் தான் இதுபோன்ற தலைமைப்பதவிகளுக்குத் தெரிவுசெய்யப்படவேண்டுமென்ற கருத்து ஏற்படக்கூடாது. அரசியலில் சடுபடாமல் சமூகத் தொண்டு புரிந்துவரும் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்களைச் சிறுபான்மைச் சமூகத்தவரும் சிறுபான்மைச் சமூகத்தைச்சேர்ந்தவர்களைப் பெரும்பான்மைச் சமூகத்தவர்களும் தலைவர்களாக ஒருமனதாகத் தெரிவுசெய்யக்கூடிய நல்லமனம் இந்நாட்டில் உண்மையான தேசிய ஐக்கியத்தை உருவாக்கமுடியும்.

யாழ். கூட்டுறவு வங்கியை மக்கள் வங்கிபொறுப்பேற்கும்

மானிப்பாய், புதன்

யாழ். கூட்டுறவுவங்கியை இம்மாதம் 22-ம் திகதி மக்கள் வங்கி பொறுப்பேற்கிறது. யாழ் கூட்டுறவு மாளிகை வங்கியை முன்பு மக்கள் வங்கி பொறுப்பேற்குமுடிவுசெய்த சமயம் அதற்குக் கூட்டுறவு அபிவிருத்தி இயக்கங்கள் வலுத்த ஆட்சேபம் தெரிவித்திருந்தன.

இதையடுத்த நடைபெற்றுவந்த பேச்சுவார்த்தைகளில் பலருடைய சமாதானம் ஏற்படவே கூட்டுறவு வங்கியை இம்மாதம் 22-ம் திகதி மக்கள்வங்கி பொறுப்பேற்கிறது.

தட்டுப்பாடு நீங்கியது

சங்கானை, புதன்

வெங்காயம், கத்தரி, பாகல், சோளம், கறியாளம், பீற்றூட் போன்ற மரக்கறி வகைகளை விதைப்பு நிலைத்தார் வர்யழைத்துள்ளனர். இதனால் இதுவரை இருந்த வந்த விதைத் தட்டுப்பாடு நீங்கி ஏதுவாயிருக்கும்.

இதற்கிடையே சுழற்சி விவசாயத்திட்டத்தின் கீழ் சங்கானை விவசாய விரிவாக்கல் நிலையத்தார் வரவழைத்துள்ளனர். இதனால் இதுவரை இருந்த விதைத் தட்டுப்பாடு நீங்கி ஏதுவாயிருக்கும்.

"மலைகூடத்தை திறந்து உதவுக"

அதிபரிடம் புதன்

நல்லூர்க்கந்தசுவாமி கோவிலில் வடக்கு வீதியிலுள்ள பொது மலசலகூடம் பொதுமக்கள் பாவனைக்கு வாழ். மாநகரசபையினரால் அண்மையிலிருந்து தடுக்கப்பட்டுள்ளது சம்பந்தமாக வாழ். நகர மேயர் திரு. அல்பிரட் கி. துரையப்பாவுக்கு மக்கள் மறுமலர்ச்சி கழகம் மகஜர் அனுப்பியுள்ளது.

அதேசமயம் இம்மலகூடம் இருந்துவருவதாகவும் நல்லூர் சுற்றுடலில் உள்ள வர்களாலும் மற்றும் நல்லூர்முருகன் கோவிலுக்கு வரும் ஏனைய பிறஇடங்களிலிருந்தும்வரும் பொதுமக்களாலும் பாவிக்கப்படுவதாலும் இம்மல கூடத்தை மூடியது நியாயமற்ற செயலென்றும் இதனைத்திறந்து பழையபடி மக்கள் பாவனைக்குவிடுமாறும் மகஜரில் கோரப்பட்டுள்ளது. இம்மலகூடமானது 15-ம் திகதி மாநகரசபையினரால் மூடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மஜீத்துக்கு வரவேற்பு

மட்டக்களப்பு, செவ்வாய்

இலங்கை முன்னாள் அரசில் உதவியமைச்சரும் பதவி ஏற்ற பின்னர் முதல்முறையாக இங்கு விஜயம்செய்த ஜனாப் மஜீத்துக்கு மட்டக்களப்பு முஸ்லிம்மெஜ்லிஸ் உபதலைவர் திரு. செ. இராசதுரை இல்லத்தில் ஹோட்டலில் தேநீர் விருந்தளித்து கௌரவித்தார்

—

மாந்தையில்

பிரசவத்தாய்மார் கஷ்டம்

கேதீஸ்வரம், புதன்

மாந்தைமேற்கு கிராம சபைப் பிரிவுக்கு மருத்துவ மாது இல்லாத இப்பகுதியிலுள்ள தாய்-சிசு பரிபாலன நிலையங்கள் செவ்வனே இயங்குவதற்குச் சிரமம் ஏற்பட்டிருப்பதுடன் பிரசவத்தாய்மார்களுக்கும் கஷ்டம் நேர்ந்துள்ளது.

இங்கு டாக்டராகவிருந்த மருத்துவ மாது வன்னிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றபின்னர் அவரது இடத்திற்கு நியமனம் பெற்ற வரும் தாதிமார் கேதீஸ்வரத்தில் சிலகாலம் சென்றபின் விலகிச்சென்றுள்ளனர்.

கட்டிடத் திறப்புவிழா

கேதீஸ்வரம், புதன்

முப்பதினாயிரம்ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள மாந்தை மேற்கு கிராம சபையின் புதிய அலுவலகக் கட்டிடத் திறப்புவிழா இம்மாதம் 27ந் திகதி மன்னார் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அலுவிநெட்டி ஜூட் திறந்து வைக்கப்படவிருக்கிறது.

விழாவையொட்டி மாதன் ஒவ்டம், கிரிக்கட்டுப் போட்டிகள், மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி முதலியன இடம்பெறும்.

கேதீஸ்வரத்துக்கு மின்னியந்திரம் அன்பளிப்பு

கேதீஸ்வரம், புதன்

உதிர்வாகம் இராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த [illegible] திருக்கேதீஸ்வர ஆலய திருப்

மீன்பிடித் தொழிலில் 5 ஆண்டு அபிவிருத்தித் திட்டம்

4500 பேருக்கு வேலைவாய்ப்பு

கோடைடை, செவ்வாய்

நாடளாவிய மீன்பிடித் தொழிலை அபிவிருத்திசெய்வதற்கான ஐந்தாண்டுத் திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது. மீன்பிடி அமைச்சர் திரு. ஜோர்ஜ் ராஜபக்ஷ செய்தித் திணைக்களத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இதனை கூறி தெரிவித்தார்.

அமைச்சரின் இப்புதிய திட்டத்திற்கு 40 கோடி ரூபா தேவைப்படுமெனவும் இவ்வபிவிருத்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதும் நாட்டின் தேவைகள் பூர்த்தியாகுமெனவும் நம்பப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஆழ்கடல் மீன்பிடி, உள்ளூர் மீன்பிடி ஆகியவை அபிவிருத்தி செய்யப்படும். உள்ளூர் மீன்பிடி அபிவிருத்தி பற்றி ஆலோசனை கூறுவதற்காக மக்கள் சீலக் குடியரசிலிருந்து குழு ஒன்று இங்கு வந்துள்ளது. சோவியத்திற்கும் இலங்கைக்குமிடையே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ் சோவியத் இழுவைக் கப்பல்கள் மூலம் உள்ளூர் மீனவர்கள் ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடிப்பதற்கும் இவ்வபிவிருத்தித்திட்டத்தில் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் இப்பொழுது பிடிக்கப்படும் மீன்களின் நிறை 60 ஆயிரம் தொன்களும் அதிகரிக்குமெனக் கடற்றொழில் அமைச்சு நம்புகிறது.

இதே வேளையில் இத்திட்டத்தின் கீழ் மீன்பிடித் தொழிலாளர்களுக்கு கரையோரப் பகுதிகளில் வீடுகள் கட்டுவதற்கு 1000 ஏக்கர் நிலம் தேவையாக உள்ளதாகவும், இத்திட்டத்தின் கீழ் 4500 பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தலாம் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இவர்களுக்கு

சேமிப்புநிதியின்றும் கிடைக்கவில்லையாம்

உதுப்பிட்டி, புதன்

சென்ற ஆண்டில் நஷ்டம் காரணமாக நிறுத்தப்பட்ட விவசாயப்பண்ணையாளர்களுக்கு இதுவரை சேமிப்புக்கென ஒதுக்கப்பட்ட பணம் வழங்கப்படவில்லையாம்.

இப்பணத்திற்கான 'வவுச்சர்கள்' சென்ற டிசம்பர் மாத நடுப்பகுதியில் அனுப்பப்பட்டு வீரர்களின் கையெழுத்துடன் திருப்பி அனுப்பப்பட்டதென்றும், பத்து மாதங்களுக்கு மேலாகியும் அப்பணத்தைப்பற்றி எதுவித தகவலும் இல்லையென்றும்கேட்கப்பட்டதில் சமீபத்தில் வீரர் ஒருவர் தெரிவித்தார். இவர்கள் மாதமொன்றுக்கு மாதம் 6 ரூபா வீதம் சேமிக்கப்பட்டதாம்.

சம்பந்தப்பட்டவர்கள் இதுபற்றி வடபகுதி எம்பிக்களுக்கு மகஜர் அனுப்பியுள்ளனர்.

ஐரோப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஐரோப்பாவிலேயே இது தான் முதல் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

வடஇலங்கை, லீஸிஸ் லுக்கான வைத்தியசாலையில் இவ்வறுவைச்சிகிச்சை நடைபெற்றது.

பணிச்சபையினருக்கு அன்பளிப்புச் செய்ய உள்ளனர். இதுவிஷயத்தில் சைவத் தமிழர் திரு சோமசுந்தரமும் திருமதி வைத்தியநாதனும் மிகுந்த அக்கறைகொண்டிருந்தனர்.

"முழுமூச்சுடன் தமிழ் காப்போம்"

திருகோணமலை புதன்

"இந்துக்களும் இஸ்லாமியர்களும் கத்தோலிக்கரும் ஒருமித்து நின்று மூவேந்தர்களாகத் தமிழைக் காத்தல் வேண்டும். இவ்வாறு திருகோணமலை வாசகர் வட்டம் கடந்த சனிக்கிழமை திருமலை நகரசபைமண்டபத்தில் நடத்திய 'தமிழ் மொழி விழாவின்போது வெளியீட்டுரை நல்கிய வண. எம். ஏ. இராசரத்தினசாலை அடிகளார் குறிப்பிட்டார்.

"எழும் தமிழுடன்" எனும் மகுடத்தில் அரசகரும மொழித் திணைக்கள தமிழ் மொழிபெயர்ப்பாளர் திரு. ந. நவசோதி சிறப்புச்சொற்பொழிவாளராகக் கலந்து கொண்டு பேசினார்.

இதழாசிரியர் குங்குமம் நாதன் பேசுகையில் அரசகரும தமிழ் செலவினையும் கச்சேரி செலவினையும் குறைக்க முன்வர வேண்டுமெனக் குறிப்பிட்டார்.

செல்வி ரெஜினி விக்கினத்தின் கவிதைகளைக்கேற்றும் இத்தலைவர் ஆசிரியர் திரு பெ பொ சிவசேனர் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் நல்லூர் எம் பி திரு கி. அருளம்பலம் பேசுகையில் வடபகுதி விதிவரதபதியின் கலெக்டர் முன்னேற்றத்துக்கான முயற்சிகளைப் பாராட்டினார்.

நல்லூர் வடக்கார விதிவரதபதிகாரி ஸ்ரீ எஸ் மகேஸ்வரஐயர் மாணவர்களுக்கு நற்சான்றிதழ்களை வழங்கினார். மூன்று நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

பாடசாலையை தரமுயர்த்த உறுதி

தாவடி, புதன்

சொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாசாலையைத் தரமுயர்த்த ஆவன செய்வதாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் திரு. எம். ஆறுமுகநாதன் குறுனர்களேற்றித் திறந்து வைத்தார். தலைமை ஆசிரியர் திரு. த. சண்முகலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார். ஆசிரியர் திரு. பொ. நடராசா நன்றி கூறினார்.

விஞ்ஞான ஆய்வுகூடம்

தாவடி, புதன்

சொக்குவில் ஞானவைரவர் வித்தியாசாலையின் புதிய விஞ்ஞான கூடத்தை வடமாகாண விஞ்ஞானக் கல்விப் பணிப்பாளர் திரு. எம். ஆறுமுகநாதன் குத்துவிளக்கேற்றித் திறந்து வைத்தார். தலைமை ஆசிரியர் திரு. த. சண்முகலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார். ஆசிரியர் திரு. பொ. நடராசா நன்றி கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org